அத்தகைய பயிற்சி பெற்றவர்களுக்கு ஏதாவது விழுக்காடு அடிப்படையில் வேலைவாய்ப்புத் தர ஆவன செய்யவேண்டும். இரண்டில் எதை அரசு செய்ய முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது உடற்பயிற்சி இளநிலை (லோயர் கிரேடு) பிரிவை எடுத்துவிடும் யோசனை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று சிக்கல்கள் அங்கே இருக்கின்றனவா என்று ஆராய வேண்டும். பயிற்சிபெற்ற எத்தனை இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமலிருக்கிறது அந்தப் பயிற்சியை நீக்கிவிடத்தான் வேண்டுமா என்பதைப் பரிசீலித்த பிறகுதான் முடிவு எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட குறிப்புகள் எதும் இப்பொழுது வரவில்லை.

திரு. ஆர். கருப்பையா : இளநிலைப் பயிற்சிபெற்றவர்களை ஊராட்சி ஒன்றியங்களின்கீழுள்ள உயர்தொடக்கப் பள்ளிகளில் ட்ரில் மாஸ்டர்களாக வேலைக்கு அமர்த்தும் திட்டம் அரசுக்கு உண்டா? பல ஊராட்சி ஒன்றிய உயர்தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாக இருந்தும் உடல் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. இத்தகைய இளநிலை உடற்பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அங்கே அமர்த்தினால் தன்னாலும் வேலைகிடைக்கவில்லை என்ற குறை நீங்கக்கூடும். ஆகவே, இந்த யோசனையை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலில் குறிப்பிட்டபடி, இத்தகைய பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களை எங்கெங்கே வேலைக்கு அமர்த்தமுடியும் என்பதையும் கண்டறிந்தபிறகுதான், பரிசீலித்து தக்க முடிவு எடுக்க வேண்டும்.

Effluence from Padalam Sugar Mills.

* 657 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the industrial waste of sugar mill at Padalam in Chingleput taluk is not treated properly and is causing inconvenience and creating insanitary conditions to the villagers surrounding that area;

(*b*) whether the sugar mill authorities are constructing a well in Palar river near the mill; and

(*c*) whether it is a fact that the well water of the surrounding villages have been affected because of the industrial waste of the sugar mill?

1970 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) செங்கற்பட்டு மாவட்டம் படாளத்திலுள்ள மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலேயிலிருந்து வெளிவரும் தொழிற்சாலைக் கழிவுப் பொருள் (Effluent) இரசாயன முறையில் பாகுபாடு செய்து வெளியில் அனுப்பப்படுவதில்லே.

(இ) ஆம்.

(உ) இல்லை.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, படாளத்திலுள்ள இந்தச் சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர், அங்கே காற்றின் தன்மையை அசுத்தமாக்கி துர்நாற்றத்தை உண்டாக்கு கிறது. அதோடு கூட, கழிவு நீரை ஆற்றில் விடுவதன் காரணமாக, அது ஆற்றின் தரையில் ஊறி, ஸீப்பேஜ் மூலமாக சுற்றியுள்ள பல கிராமங்கள், நகரங்களிலுள்ள கிணற்று நீரை அசுத்தப்படுத்தி, ஆரோக்கியத்தைக் கெடுக்கிறது. ஆகவே, இந்தக் கழிவு நீர் சரி செய்யப்பட்டு, ட்ரீட் செய்யப்பட்டுத்தான் விடப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து அதற்கு உண்டான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக கெமிகல்ஸ் தொழிற்சாலை போன்றவற்றிலிருந்து வெளிவரும் கழிவுநீர் நச்சுத்தன்மை பொருந்தியதாக இருக்கும். அதை 'மாற்று' செய்து பக்குவப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், வெளி வருகின்ற கழிவு நீர் அப்படிப்பட்ட கொடுமைகளை உண்டாக்கும் சூழ்நிலையில் இல்லை. வெளியே வரும் தண்ணீரை 200 அடிக்கு அப்பாலுள்ள ஒரு குழிக்குக் கொண்டு போகிறார்கள். அது கூட, கற்களால் இருபக்கமும் கட்டப்பட்ட வாய்க்கால் மூலம் கொண்டு போகப்பட்டு, அங்கிருந்து பம்ப் செய்யப்பட்டு, தொழிற்சாலைக்குச் சொந்தமான 32 ஏக்கரா நிலத்தில்தான் பாய்ச்சப்படுகிறதே தவிர, அந்த 32 ஏக்கராவைத் தாண்டி வேறு எந்த நிலத்திற்கும் இந்தக் கழிவு நீர் பாய்வது இல்லை. 32 ஏக்கராவிற்குப் பாயும் அளவுக்குத் தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆக, வேறு இடங்களில் போய்ப் பாய்கிற சூழ்நிலை ஏற்படவில்லை. 'மோலஸஸ்' ஏழு குழிகளில் நிரப்பப்படுகின்றன. அந்த ஏழு குழிகளில் மூன்று குழிகள் கட்டடம் கட்டப்பட்டவை; நான்கு மண் குழிகள். பெரு மழை பெய்து எங்கு பார்த்தாலும் வெள்ளம் அடித்தபோது, மொலாஸஸ்ஸுக்காக உள்ள குழிகளில் நீர் நிரம்பி வழிந்து வேறு பல இடங்களில் பரவும் சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குப்பிறகு அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவில்லை. பக்கங்களில் இருக்கும் கிணற்றுத் தண்ணீர் இதனால் பாதிக்கப்படவில்லை என்று மாவட்ட சுகாதார அதிகாரியும் மற்றவர்களும் ஆராய்ந்து பார்த்ததில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கிராம மக்களேகூட, நீருக்காக இருக்கும் இரண்டு பெரும் கிணறுகள் இதன் காரணமாகப்

பாதிக்கப்படவில்லை என்று தெரிவித்ததுபற்றிய குறிப்புதான் இங்கே தரப்பட்டிருக்கிறது.

திரு. என் வரதராஜன்: இப்படி சில முக்கியமான தொழிற் சாலைகளின் கழிவுநீர் வெளியேறி விவசாயத்தைப் பெரிதும் பாதிக்கிறது. ஆகவே இனி லைசென்சு கொடுக்கிறபோதே விஞ்ஞான முறையில் கழிவு நீரை நல்ல நீராக மாற்றித்தான் வெளியேவிட வேண்டும் என்கிற கட்டுப்பாட்டை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: விவசாயத்தையோ, கிராம குடிதண்ணீர் வசதியையோ பாதிக்காத வகையில்தான் கழிவுநீர் வெளியேற்றப்பட இப்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த இடத்தில் கூட 16 அடி வட்டமுள்ள கிணறு தோண்டி விடவும், வறண்டு கிடக்கிற வாய்க்கால் வழியே செலுத்தவும் நடவடிக்கை எல்லாம் எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 658, 659, 660 பின்னால் எடுத்துக்கொள்ளப்படும்.

சி. சாத்தமங்கலம் அரிசன நலப்பள்ளி கட்டடம்

*661 வினா—**திரு. எஸ். சிவசுப்ரமணியன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, சி. சாத்தமங்கலம் கிராமம், அரிசன நலப்பள்ளிக் கட்டடம் கட்டி முடித்த தேதி என்ன?

(இ) மேற்கண்ட கட்டடத் திறப்பு விழா நடந்த தேதி என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) 30—9—1967-ல் தற்காலிகக் கூரை ஒன்று மட்டும்தான் ஐந்தாயிரம் ரூபாயில் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) குறிப்பிட்ட ஒரு திறப்பு விழா எதுவும் நடைபெற வில்லை.

திரு. எஸ். சிவசுப்ரமணியன்: இது போன்ற சாதாரண கொட்டகை கட்டுவதனால் மழைக் காலங்களில் விணாகிவிடுகிறது. நல்லதொரு கட்டடம் கட்ட நம் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாவட்ட அரிசன நல அதிகாரி இதுபற்றி சர்க்காருக்கு ஒரு திட்டம் அனுப்பியிருக்கிறார். இதுபற்றி கவனிக்கப்படும்.

*662 வினா—**திரு. சி. கோவிந்தராஜன்:** மாண்புமிகு வேளாண்மை ,அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—